# பாடம் 10: ஆபிரகாம்
# (ஓர் இனத்துடனான உடன்படிக்கை 2)

**விசுவாசத்தைக் கற்பிப்போருக்கான அறிவுறுத்தல்**
அடிப்படை நிலை (7 வயது) : 1 முதல் 8 கருத்துகளைக் கற்பிக்கவும்
இடைப்பட்ட நிலை (10 வயது) : 1 முதல் 10 கருத்துகளைக் கற்பிக்கவும்
மேம்பட்ட நிலை (13 வயது) : 1 முதல் 12 கருத்துகளைக் கற்பிக்கவும்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**
முந்திய பாடத்தில், ஆபிரகாமும் சாராவும் மிகவும் வயது முதிர்ந்தவர்களாய் இருந்தாலும் கடவுள் எப்படி அவர்களுக்கு ஒரு மகனைக் கொடுத்தார் என்பதை நாம் கற்றோம். பல்வேறு விதங்களில் ஆபிரகாமின் விசுவாசத்தை சோதித்தார், அதற்கு கீழ்ப்படிதலுடன் ஆபிரகாம் தமது முதல் மகன் இஸ்மயேலை வெளியே அனுப்பவும், இரண்டாவது மகன் ஈசாக்கைப் பலி கொடுக்கவும் கோரப்பட்டது பற்றியும் நாம் கற்றோம். ஈசாக்கைப் பலியிடுமாறு ஆபிரகாமிடம் கடவுள் கோரினாலும், அது உண்மையில் ஒரு சோதனையாகவும் எதிர்காலத்தில் நடைபெற உள்ள ஒன்றின் முன்நிழலாகவும் இருந்தது விளக்கப்பட்டது. இந்த பாடத்தில், ஆபிரகாமுக்கு கடவுள் வழங்கிய வாக்குறுதியை அவர் எப்படி ஈசாக்கு (அவரது மகன்) மற்றும் யாக்கோபு (அவரது பேரன்) வழியாக நிறைவு செய்தார் என்பதைப் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**
1. ஈசாக்கிற்கு 40 வயதாகும் முன்பே, அவருக்கு ரெபேக்காவுடன் திருமணம் நிகழ்ந்தது. ஆனால் திருமணமாகி பல ஆண்டுகளுக்குப் பிறகும், ரெபேக்காவுக்கு ஒரு குழந்தை பிறக்காததால் மலடி என்று நம்பப்பட்டார். வெளிப்படையாக, ஆபிரகாமின் விசுவாசத்தை சோதித்த அதே விதத்தில் கடவுள் ஈசாக்கின் விசுவாசத்தையும் கடவுள் சோதித்துக் கொண்டிருந்தார். ஈசாக்கு ரெபேக்காவுக்காக செபிக்க, அவர் கருத்தாங்கி, ஏசா (மூத்தவர்) மற்றும் யாக்கோபு (இளையவர்) என இரட்டை மகன்களைப் பெற்றெடுத்தார். அவர்கள் பிறந்த பொழுது ஈசாக்கின் வயது 60. ஈசாக்கிற்கு ஏசாவைப் பிடித்திருந்தது, ரெபேக்காவுக்கு யாக்கோபைப் பிடித்திருந்தது.

2. மூத்த மகனாக, ஏசா தமது தந்தையின் சொத்துரிமையில் உரிமைகள் கொண்டிருந்தார். ஒரு நாள், வேட்டையில் இருந்து வீட்டுக்கு வந்தபோது பசியாய் இருந்தார். தமது இளைய சகோதரன் யாக்கோபு சிறிது கூழ் செய்து கொண்டிருந்ததை அவர் கண்டார், ஏசா கூழைப் பெறுவதற்கு நடத்தியப் பேச்சுவார்த்தையில், ஒரு கிண்ணம் கூழுக்காக தமது பிறப்புரிமையை யாக்கோபுக்கு வழங்க ஆணையிட்டு ஒப்புக்கொண்டார். ஏசா இத்தகைய நபராக இருந்தார், எப்பொழுதும் உடனடி மனநிறைவில் அக்கறை கொண்டிருந்தார், மேலும் விசுவாசம் மற்றும் வாழ்வு குறித்த முக்கிய விடயங்களில் ஆர்வமின்றி இருந்தார். (பிறப்புரிமை கொண்டுள்ளோர் தங்கள் தந்தை இறந்ததும், தந்தையின் செல்வம் முழுவதையும் அடைவர்.)

முதலில், கிறிஸ்தவர்களாக நமது “பிறப்புரிமை” குறித்து சிந்திப்போம். நமது திருமுழுக்கு மற்றும் இயேசு கிறிஸ்துவில் நமது விசுவாசத்தின் காரணமாக, நாம் தந்தையின் பிள்ளைகள் ஆகிறோம், அதனோடு தற்போதும் பிறகு விண்ணகத்திலும் வருகின்ற அனைத்து பயன்களும் சொத்துரிமை இணைந்துள்ளன. இன்னும், நமது விசுவாசத்தைக் குறித்து நாம் அக்கறை கொள்ளவில்லை எனில், நாமும் ஏசாவைப் போன்றச் சூழல்களில் நம்மைக் காண முடியும், ஒரு கிண்ணம் கூழுக்கு நிகரானவற்றுக்காக, நமது பிறப்புரிமையான நமது சொத்துரிமையை இழக்கத் தயாராக இருக்கிறோம்.

மனிதர்கள் அனைத்து வகையான விடயங்கள் மீதும் மிகுந்த பசி கொண்டுள்ளனர். நாம் நிரப்பப்பட ஏங்கும் நேரங்களில் நம்மில் பசியைக் காண்கிறோம், மேலும் அந்த பசி அல்லது வெறுமையைத் தற்காலிகமாக நிறைவாக்கும் வாக்குறுதியால் நம்மைச் சோதிக்கிற ஒன்றால் திடீரென்று தடுமாறுகிறோம். இந்த கவர்ச்சியான விடயங்கள் கடவுளின் மகன்கள் மற்றும் மகள்கள் என்ற நமது தகுதிக்குப் பொருந்தாதவை என்பது தெளிவு. இந்த கவர்ச்சியான விடயங்களைத் தெரிவு செய்வது கடவுளிடம் இருந்து நம்மை அப்பால் திருப்புகிறது. அதன் விளைவாக, நமது பிறப்புரிமையை மாற்றிக் கொள்கிறோம். ஏசா தாம் செய்ததற்காகப் பிறகு வருந்தினார், ஆனால் தமது மடத்தனமான செயலை திரும்பப்பெற அவருக்கு எந்த வாய்ப்பும் இருக்கவில்லை. கடவுள் ஆபிரகாமுக்கு வாக்களித்த ஆசிகளை ஏசாவுக்குப் பதிலாக

யாக்கோபு ஏன் உரிமையாக்கிக் கொண்டார் என்பதை ஏசாவின் பண்பு நமக்கு காட்டுகிறது. (தொடக்க நூல் 25:29-34)

3. ஈசாக்கு முதுமை அடைந்து பார்வை மங்கியிருந்த பொழுது, தாம் இறக்கும் முன்பு அவர் தமது மூத்த மகன் ஏசாவுக்குத் தமது ஆசியை வழங்க விரும்பினார். (இது தமது தந்தை இறந்ததும் அவரது இடத்தை உரிமையாக்குகிறவராக மூத்த மகனை அடையாளப்படுத்தும் மரபுமுறை வழியாக இருந்தது.) ஆகவே ஈசாக்கு ஏசாவை அழைத்து ஒரு விலங்கை வேட்டையாடி அதை உணவாகத் தயாரித்துக் கொண்டு வருமாறு அறிவுறுத்தினார், அதன் பிறகு அவர் ஏசாவுக்கு மரபுமுறை ஆசியை வழங்குவார். வெளிப்படையாக, ஏசா தமது பிறப்புரிமையை யாக்கோபுக்கு முன்னதாகவே விற்று விட்டதை மறந்து விட்டார் (தெளிவாக, ஓர் ஒப்பந்தம் அல்லது வாக்குறுதி என்பது அவருக்கு ஒன்றுமே இல்லை).

ஏசா வேட்டைக்குச் சென்றிருந்தபோது, அந்த உரையாடலைக் கேட்டிருந்த ஈசாக்கின் மனைவி ரெபேக்கா, தங்கள் மந்தையில் இருந்து இரண்டு ஆடுகளைக் கொண்டு ஈசாக்கிற்கு உணவு தயாரித்து கொடுக்குமாறு யாக்கோபிடம் கூறினார், அதனால் தமது சொத்துரிமையை அடையாமல் ஏசாவை அவர்கள் ஏமாற்ற முடியும். அவர் யாக்கோபை ஏசாவின் உடைகளை அணிந்து கொண்டு, கழுத்திலும் புயங்களிலும் ஆட்டுத்தோலால் மூடிக்கொள்ளச் சொன்னார், அதனால் யாக்கோபை விட அதிக முடியுடைய ஏசா என்று நினைத்து ஈசாக்கு ஏமாந்து விடுவார். யாக்கோபு சுட்ட ஆட்டிறைச்சியை தந்தைக்குப் பரிமாறினார், ஈசாக்கிற்கு சந்தேகம் இருந்தாலும், அவர் சுவையான உணவை உண்டதும் யாக்கோபுக்கு குடும்ப ஆசியை வழங்கினார். தந்தையிடம் இருந்து யாக்கோபு விலகிச் சென்றதும் ஏசா வந்தார், வேட்டை விலங்கின் இறைச்சியைச் சமைத்து தமது தந்தைக்கு வழங்கினார். ஏசா பேசியதை ஈசாக்கு கேட்ட உடனே, தாம் ஏமாற்றப்பட்டதை அவர் அறிந்தார். இதை உய்த்துணர்ந்ததும் அவர் மிகவும் அதிர்ச்சியுற்றார், ஆனால் ஈசா வேண்டினாலும், அவர் தமது ஆசியைத் திரும்பப்பெற முடியவில்லை, ஏசா தமது இளைய இரட்டையருக்கு அடிபணிந்திருப்பார் என்பதை உறுதி செய்தார். ஏசா தமது பிறப்புரிமையை திருடியதற்காக யாக்கோபின் மீது சீற்றம் கொண்டார். ஈசாக்கு இறந்த உடனே யாக்கோபைக் கொன்றுவிட அவர் உறுதியேற்றார். ஆனால் ரெபேக்கா காரானில் இருந்த தமது சகோதரர் லாபானிடம் யாக்கோபை விரைந்து அனுப்பினார். (தொடக்க நூல் 27:1-45)

4. யாக்கோபு வீட்டை விட்டுச் சென்றார், இறுதியாக (லாபானின் மகள்களான) லேயா மற்றும் ராகேல் என்ற இரண்டு மனைவிகளைத் திருமணம் செய்து கொண்டார். அவருக்கு பன்னிரு மகன்கள் இருந்தனர், அவர்கள் அனைவரும் இந்த இரண்டு மனைவிகள் மற்றும் அவர்களது பணிப்பெண்களுக்குப் பிறந்தவர்கள். ரூபன், சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத்து, ஆசேர், இசக்கார், செபுலோன், யோசேப்பு மற்றும் பென்யமின் ஆகியவையே அவர்களின் பெயர்கள். இவர்களே இறுதியாக இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் மூதாதையர்களாக இருப்பர். ஆனால் அனைத்து மகன்களிலும், யாக்கோபு மிகவும் அன்பு செய்த ஒருவர் பதினோராவது மகனான யோசேப்பு, ஏனெனில் அவர் யாக்கோபு உண்மையில் அன்பு செய்த மனைவியின், அதாவது ராகேலின் தலைப்பேறு. அவர் முதலில் லேயாவைத் திருமணம் செய்ததற்கு காரணம், அவரைத் திருமணம் செய்யுமாறு லாபான் ஏமாற்றியதே.

யோசேப்பு தந்தைக்கு மிகவும் பிடித்த மகன் என்பதால், அவரது அரை சகோதரர்கள் அவர் மீது பொறாமை கொண்டு அவரை அடிக்கடி கேலி செய்தனர். தமது அரை சகோதரர்களின் தவறானச் செயல்கள் குறித்து தமது தந்தையிடம் கூறும் காட்டிக் கொடுக்கிறவராகவும் அவர் இருந்தார். யோசேப்பு 17 வயதினராக இருந்த பொழுது, யாக்கோபு ஒரு நீண்ட ஒய்யாரமான பல வண்ண அங்கியை அவருக்காக உருவாக்கினார். இதைக் கண்டதும், அரை சகோதரர்கள் யோசேப்பை வெறுக்கத் தொடங்கினர். பின்னர் தமது குடும்பம் தம்மை வணங்குவது போன்ற கனவுகளை யோசேப்பு காணத் தொடங்கினார். இத்தகைய கனவுகள் குறித்து அவர் தமது சகோதரர்களிடம் கூறிய பொழுது, அது அவர்கள் அவருக்கு எதிராக சூழ்ச்சி செய்யத் தூண்டியது. யாக்கோபு இந்த கனவுகளைப் பற்றி கேள்வியுற்ற பொழுது, யோசேப்பை தமது குடும்பம் வணங்கும் என்ற கருத்தை முன்மொழிந்ததற்காக தமது மகனை அவர் கண்டித்தார். (தொடக்க நூல் 37:1-11)

5. யோசேப்பின் சகோதரர்கள் அவரை வெறுத்ததால், அவர்கள் இறுதியாக அவரை எகிப்து சென்ற ஒரு வணிகக்குழுவிடம் ஓர் அடிமையாக விற்றனர். எகிப்தில், அவர் பார்வோனின் அதிகாரிகளில் ஒருவரான போத்திபாரிடம் விற்கப்பட்டார் (“பார்வோன்” என்பது எகிப்திய அரசனுக்கான பட்டமாகும்). யோசேப்பின் பல வண்ண அங்கியைக் கைப்பற்றிய சகோதரர்கள், அதை ஒரு விலங்கின் குருதியில் தோய்த்து தங்கள் தந்தையிடம் கொண்டு வந்தனர். அந்த

அங்கி தமது மகனுடையது என்று உய்த்துணர்ந்த யாக்கோபு, யோசேப்பு ஒரு காட்டு விலங்கால் கொல்லப்பட்டார் என்ற முடிவுக்கு வந்தார். அவர் தமது மகனை இழந்ததற்காக பல நாட்கள் அழுது புலம்பினார், அவரை எவராலும் ஆற்றுப்படுத்த முடியவில்லை. (தொடக்க நூல் 37:31-36)

6. யோசேப்பு எகிப்தில் ஓர் அடிமையாக கால் பதித்தார். சிறிது காலத்தில், விடயங்கள் யோசேப்புக்கு சாதகமாக மாறத் தொடங்கின. கடவுளின் உதவியால் தமது தலைவரின் கண்களில் அவர் தயவு பெற்றார், போத்திபார் வீட்டின் உடைமைகளுக்குத் தலைவராக நியமிக்கப் பெற்று, போத்திபாரின் முழு நம்பிக்கைக்கு உரியவராக இருந்தார். எனினும், இது நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. அவரது அழகியத் தேற்றத்தால் ஈர்க்கப்பட்ட போத்திபாரின் மனைவி அவருடன் நெருக்கமாக இருக்க விரும்பினாள். யோசேப்பு தொடர்ந்து மறுத்ததால் அவள் சினமுற்றாள். ஒரு நாள் அவர்கள் இருவரைத் தவிர யாரும் வீட்டில் இல்லாத பொழுது, அந்த தலைவி யோசேப்பின் ஆடையைப் பிடித்திழுத்து அவர் ஒப்புக் கொள்ளுமாறு வற்புறுத்தினாள். விரைந்து சிந்தித்த யோசேப்பு, தமது மேலாடையை விட்டுவிட்டு வெளியே ஓடினார். ஆனால் போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீது பழியைத் திருப்பினாள், அவள் தனது கணவரிடம் யோசேப்பு தன்னை அடைய விரும்பியதாக கூறினாள். சினமுற்றத் தலைவர், தமது நம்பிக்கைக்குரிய உதவியாளரைச் சிறையில் இட்டார். (தொடக்க நூல் 39:1-20)

7. யோசேப்பின் அருட்கொடை சிறையிலும் அவரைத் தொடர்ந்தது, சிறை அலுவலர் அவரைத் தமது வலக்கை மனிதராக நியமித்தார் (தொடக்க நூல் 39:21-23). தகுந்த காலத்தில், அவரது தனித்துவமான தகுதிகள் ஒரு கூடுதலான பகுதியில் தங்களை வெளிப்படுத்தின: அரசரின் மது பரிமாறுகிறவரும் அப்பம் தயாரிக்கிறவரும் சிறையில் இருந்த பொழுது, மது பரிமாறுகிறவர் விடுதலை செய்யப்படுவார், அப்பம் தயாரிக்கிறவர் தூக்கில் இடப்படுவார் என்று சரியாக முன்னுணர்ந்து, அவர்களின் கனவுகளுக்கு வெற்றிகரமாக விளக்கம் அளித்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, பார்வோன் தாமே இரண்டு கனவுகளைக் கண்டார், அவற்றை அவரது ஆலோசகர்களில் எவரும் விளக்க இயலவில்லை. தமது சிறை நாட்களில் இருந்து அந்த எபிரேய இளைஞரை நினைவுகூர்ந்த மது பரிமாறுகிறவர், யோசேப்பை அழைக்கப் பரிந்துரை செய்தார். அவ்வேளையில் 30 வயதினராக இருந்த யோசேப்பு, பார்வோனின் கனவுகள் வரவிருக்கும் ஏழு செழிப்பான ஆண்டுகளையும் தொடர்ந்து வரும் ஏழு பஞ்சத்தின் ஆண்டுகளையும் காட்டும் இறை முன்னுணர்த்தல் என்று விளக்கம் அளித்தார். யோசேப்பின் ஞானத்தால் கவரப்பட்ட பார்வோன், அரசருக்கு அடுத்த நிலையில் தமது ஆளுநராக அவரை நியமித்து, பஞ்சத்தின் ஆண்டுகளுக்காக நாட்டைத் தயாரிக்கும் பணியை அவருக்கு கொடுத்தார். பஞ்சத்தின் ஆண்டுகளில், எகிப்து பாதிப்புக்கு ஆளாகவில்லை. உண்மையில், மற்ற நாடுகளும் யோசேப்பிடம் இருந்து தானியம் வாங்க முயன்றன. (தொடக்க நூல் 41:1-56)

8. இதனிடையே, அருகிலிருந்த கானான் பகுதியும் பஞ்சத்தின் பாதிப்புகளுக்குத் தப்பவில்லை. யாக்கோபின் மகன்கள் தற்போது தங்களுக்கென சொந்த குடும்பங்களைக் கொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் அனைவரும் ஒருவர் மற்றவருக்கு அருகில் வாழ்ந்தனர். எகிப்தில் தானியம் கிடைப்பதாகக் கேள்வியுற்று, யோசேப்பின் சகோதரர்கள் அரசப்பதிலரிடம் இருந்து மதிப்புமிகு உணவை வாங்க அங்கு பயணித்தனர், அவர் அவர்களின் சொந்த சகோதரர் என்பது அவர்களுக்குத் தெரியாது (அவர் இறந்து விட்டதாக அவர்கள் நினைத்திருக்கலாம்). தங்கள் வயது முதிர்ந்த தந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக பென்யமின் வீட்டிலேயே தங்கி இருந்தார்.

தம்மை விற்றதற்காக தமது சகோதரர்கள் உண்மையில் மனம் வருந்தினார்களா, மேலும் தம்மை நடத்திய விதத்திலேயே பென்யமினையும் (யோசேப்பின் ஒரே தாய்வழி சகோதரர்) நடத்தினரா என்பதைக் கண்டறிவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள யோசேப்பு முடிவெடுத்தார். அடுத்தடுத்து ஏய்ப்பு நாடகங்களைப் பயன்படுத்தி, தாம் உருவாக்கிய சதியில் இருந்து தங்களது இளைய சகோதரர் பென்யமினைப் பாதுகாக்கும் தனது சகோதரர்களின் மனவுறுதியைச் சோதித்தார். பென்யமினுக்கான அவர்களின் அர்ப்பணத்தைக் கண்டதும், இறுதியாக யோசேப்பு வியப்புற்றிருந்த தமது உடன்பிறந்தோருக்கு தமது அடையாளத்தை வெளிப்படுத்தினார். இந்த இதயப்பூர்வ மறுவொன்றிப்பைத் தொடர்ந்து, யாக்கோபும் அவரது குடும்பத்தினரும் எகிப்தில் குடியமர்ந்தனர். அவர்கள் எகிப்தில் இருந்த பொழுது, பார்வோன் வழிகாட்டுதலுக்கு ஏற்ப அவர்களுக்கு மிகவும் வசதியான வாழ்வை யோசேப்பு வழங்கினார். (தொடக்க நூல் 42:1-47:11)

9. ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் வாழ்வுகளில் இருந்து, கடவுளின் விருப்பத்தை நமது வாழ்வில் செயல்படுத்துவது எளிதான விடயமன்று என்பதை நாம் காண முடியும். இதற்கு சரியானதைச் செய்ய முடிவெடுப்பது நமக்குத் தேவையாகிறது, மேலும் சரியானதைச் செய்வது சில நேரங்களில் அதே மதிப்பீடுகளையும் நோக்கங்களையும் கொண்டிராத மக்களுடன் நமக்கு இடரை ஏற்படுத்தும். பெரும்பாலும், நாம் கடவுளின் விருப்பத்தைச் செய்யும் நோக்கத்துடன் இருக்கும் பொழுது, நமது கீழ்ப்படிதலுக்கான எதிர்கால விளைபலன் என்ன என்பதை நாம் காண்கிறதில்லை; கடவுள் மட்டும் அனைத்தையும் காண்கிறார். கடவுளின் விருப்பத்துக்கு கீழ்ப்படிதல் என்பது, கடவுள் நமது கீழ்ப்படிதலை அவரது மாட்சிக்காகவும் மற்ற மக்களின் நன்மைக்காகவும் பயன்படுத்துவார் என்ற விசுவாசம் மற்றும் நம்பிக்கையால் பிறக்கிறது. நமது கீழ்ப்படிதலை நமக்கான அதன் உடனடி பயன் அல்லது உடனடி விளைவை எதிர்பார்ப்பதன் அடிப்படையில் நாம் மதிப்பீடு செய்தால், கடவுளுக்கு கீழ்ப்படிதல் அந்த இடருக்குத் தகுந்தது இல்லை என்று நாம் உணரலாம். கீழ்ப்படிவதற்கு, நாம் கடவுளை மகிழ்விக்க ஆசைப்பட வேண்டும். கடவுளை மகிழ்விக்கும் ஆசை இல்லாமல், நாம் கீழ்ப்படிதலுடன் இருக்க முடியாது.

10. கடவுளின் விருப்பத்தைச் செய்வதை நோக்கி நமது குடும்பங்களை நடத்த நமக்கியன்ற சிறந்ததைச் செய்வதும் மிகவும் முக்கியமானது. கடவுளுக்கு கீழ்ப்படிவதற்காக ஆபிரகாம் தமக்கியன்ற சிறந்ததை எப்படி செய்தார், அவரது கீழ்ப்படிதலால் வந்த ஆசிகளை ஈசாக்கு எப்படி அனுபவித்தார் என்பதை நாம் காண்கிறோம். அவ்விதமே, ஈசாக்கின் ஆசிகள் யாக்கோபுக்கும், தொடர்ச்சியாக யோசேப்பு வழியாக யாக்கோபின் மற்ற மகன்களுக்கும் அளிக்கப்பட்டன. அதே நேரத்தில், கடவுளுக்கு கீழ்ப்படிவது நாம் விடயங்களை நிறைவாகச் செய்வோம் என்பதற்கு உறுதியளிக்காது. ஒரு குடும்பமாக கடவுளின் விருப்பத்தைச் செய்ய முயற்சிக்கும் செயல்மையில், நமது சொந்த குறைபாடுகளால் நாம் அடிக்கடி தவறுகள் செய்கிறோம். எடுத்துக்காட்டாக, இஸ்மயேல் வாக்களிக்கப்பட்ட மகனாக இல்லை என்றாலும், ஆபிரகாம் எப்படி (தங்களது பணிப்பெண்) ஆகாரோடு சேர்ந்து ஒரு மகனைப் பெற்றார் என்று காணுங்கள். யாக்கோபு தாமே மூத்த சகோதரன் என்று தங்களது பார்வையற்றத் தந்தையை ஏய்த்து, எப்படி ஏசாவின் பிறப்புரிமையைப் பறித்தார் என்று காணுங்கள். ஆனால் உங்கள் நோக்கம் சரியானதாக இருந்தால், நமக்கியன்ற சிறந்ததைச் செய்தால், இந்த குறைபாடுகள் கடவுளின் விருப்பம் நமது வாழ்வில் இடம்பெறுவதைத் தடுக்காது. கடவுளின் விருப்பத்தைச் செய்வது என்பது விடயங்களை நிறைவாகச் செய்வதைக் பற்றியதன்று; அது தூய நோக்கங்கள் கொண்டு, கடவுளின் வழிகாட்டலுக்கு ஏற்ப இந்த தூய நோக்கங்களைச் செயல்படுத்த நமக்கியன்ற சிறந்ததைச் செய்வதைப் பற்றியதாகும். மீண்டும், கடவுளின் விருப்பத்தைச் செய்வது கடவுளை மகிழ்விக்கும் ஆசையில் இருந்து வர வேண்டும்.

11. யோசேப்பின் வாழ்வில் இருந்து மன்னிப்பு என்ற மதிப்பீட்டையும் நாம் கற்றுக் கொள்கிறோம். கடவுளின் விருப்பத்தைச் செய்ய, முன்பு நம்மைத் துன்புறுத்திய மனிதர்களை நாம் மன்னிக்க வேண்டியதிருக்கும். இது அவர்கள் நமக்கு இழைத்த தவறுகளை விலக்குவது இல்லை, மாறாக மன்னித்தலின் வலி நமது இதயங்களைத் தூய்மையாக்க அனுமதிப்பதால் கடவுள் தமது விருப்பத்தை நமது வாழ்லில் செயல்படுத்த முடியும். யோசேப்பு தமது சகோதரர்களை மன்னிக்காமல் இருந்திருந்தால், அவர்கள் அனைவரும் பஞ்சத்தால் தங்களின் குடும்பத்தினரோடு சேர்ந்து இறந்திருக்க வாய்ப்புள்ளது. அதன் விளைவாக, இஸ்ரயேலின் பன்னிரு குலங்களும் இருந்திருக்காது. கற்பனை செய்யுங்கள், கடவுளின் இந்த பெருந்திட்டம் முழுவதுமே, தமது சகோதரர்களை இளமையில் அவர்கள் செய்த குற்றத்திற்காக மன்னிக்கும் ஒரு மனிதரின் இயலுமையைச் சார்ந்திருந்தது. மன்னிக்க இயலவில்லை என்றால், நாம் உண்மையாக கடவுளின் விருப்பத்தைச் செய்ய மாட்டோம்.

யோசேப்பின் அடையாளத்தைக் கண்டறிந்ததும், யோசேப்பு தமது ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்தி தங்களது கடந்தகாலப் பாவங்களுக்காகச் சரியாகப் பழிவாங்குவார் என அவரது சகோதரர்கள் உறுதியாக நம்பினர். எனினும், யோசேப்பு வெளிப்படுத்திய உள்ளுணர்வுகள் அதற்கு நேர் எதிரானவையாக இருந்தன: "தற்போது நீங்கள் வருந்த வேண்டாம், நீங்கள் என்னை இங்கு விற்றது உங்களை இடருக்குள்ளாக்க வேண்டாம், வாழ்வைக் காப்பதற்காக உங்களுக்கு முன்பு என்னை அனுப்பியுள்ளார்... என்னை இங்கு அனுப்பியது நீங்களல்லர், மாறாக கடவுளே." எகிப்து மற்றும் சுற்றியுள்ள நாடுகளின் வாழ்வை உறுதி செய்யவும், மேலும் தமது குடும்பத்துக்கு உதவவுமே தாம் அனுபவித்த அனைத்து துன்பங்களையும் கடவுள் பயன்படுத்தியுள்ளார் என்பதை யோசேப்பு உய்த்துணர்ந்தார். இதை மனதில் கொண்டதால், அவரால் தமது சகோதரர்களை மன்னிக்கவும், வன்மத்துக்குப் பதில் கனிவைத் திரும்பச் செலுத்தவும் இயன்றது. நமது இதயங்களில் பழிவாங்கலை வைத்திருப்பதற்கு பதில்,

நமது வாழ்வு முழுவதும் நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் மற்றும் இன்னல்களில், இந்த இடர்பாடுகள் மற்ற மக்களால் நம்மீது திணிக்கப்பட்டாலும், அவற்றில் கடவுளின் திட்டம் செயல்படுவதைக் காண நம்மால் இயல்வது முக்கியமானது. இன்னும் நாம் அதை புரிந்து கொள்ளவில்லை என்றாலும் நமது துன்பத்திற்கு எப்பொழுதும் ஒரு நோக்கம் இருக்கிறது.

12. ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின் குடும்பங்களில் உள்ள மனிதர்களுக்கு நேர்ந்த தவறுகளில் பெரும்பாலானவை அவர்களது சொந்த குடும்ப உறுப்பினர்களால் செய்யப்பட்டன என்பதை நோக்குங்கள். நாம் நெருக்கமாக இருக்கின்ற மனிதர்களே அடிக்கடி நம்மைக் புண்படுத்துவோராக உள்ளனர். உங்களை அதிகமாகப் புண்படுத்துவோர் யார்? உங்கள் உடன்பிறந்தோரா? உங்கள் பெற்றோரா? உறுதியாக, அவர்கள் நிறைவான சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும், உங்கள் தந்தையும் தாயும் நிறைவான பெற்றோர்களாகவும் இருக்க மாட்டார்கள். எவரும் நிறைவானவர் இல்லை, நம்மையும் சேர்த்து. அவர்களும் தங்களால் முடிந்தளவு சிறந்ததைச் செய்கின்றனர், அவர்களுக்குத் தெரிந்த சிறந்த விதத்தில் நமக்கு உடன்பிறந்தோராகவும் பெற்றோராகவும் இருக்கின்றனர். ஆனால் நம்மைப் போன்றே, அனைத்து விதத்திலும் அவர்கள் நிறைவானவர்களாக இல்லை. நமது செயல்கள் சில நேரங்களில் அவர்களைப் புண்படுத்தும் அதே விதத்தில், அவர்களும் சில நேரங்களில் உங்களைப் புண்படுத்தும் விடயங்களைச் செய்வதாக நீங்கள் கண்டறிவீர்கள். நாம் ஒரு குடும்பமாக கடவுளின் விருப்பத்தைச் செய்கிறதை உறுதிப்படுத்த, மன்னிப்பு முக்கியமாக இருக்கிறது.